DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahila Court, Madurai.

| | |
|---|---|
| Special Sessions Case | - S.C **No. 200/2016** |
| Deposition of witness for | - P.W. 4 |
| Name | - Anantha pandiyan |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the **04.03.2021**

முதல் விசாரணை:

நான் கீழ வளவில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளைத் தெரியாது. 1 வது எதிரியின் மனைவியை த்தெரியாது. இந்த வழக்க பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன்பேரில் குறுக்குவிசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

**10.09.2004ம் தேதி 1 வது எதிரியும் ஜெயலட்சுமிக்கும் திருமணம் நடந்தது. அப்போது வரதட்சணையாக 25 பவுண் நகையும் சீர் வரிசை பொருட்களும் ஜெயலட்சுமி வீட்டார் கொடுத்தார்கள் என்றும் திருமணமானதிலிருந்தே இருவருக்கும் சண்டை ஏற்பட்டது என்றும்**

பெரியோர்களை வைத்து சமாதானம் செய்து வைத்தார்கள். என்றும் 1 வது எதிரிக்கும் 4 வது எதிரியான ராணி என்பவருக்கும் தவறான பழக்கம் ஏற்பட்டு 1வது எதிரியின் தாயார் மற்றும் தம்பியிடம் ஜெயலட்சுமி இது பற்றி கூறியதற்கு அவர்கள் அனுசரித்து வாழ் ஏ்னறு கூறினார்கள் என்றும் மேலும் 50 ஆயிரம் ரூபாய் வாங்கி வந்தால் தான் என் மகனுடன் வாழமுடியும் என்று கூறினார்கள் என்றும் ஜெயலட்சுமியின் மாமியார் கூறினார் என்றும் தனது மகனுக்கு மார்க்க கல்யாணம் செய்து வைத்து அதற்கு எந்த மருத்துவமும் செய்யவில்லை என்றும் ராணியின் குழந்தை இறந்து விட்டதால் ஜெயலட்சுமியின் குழந்தையும் இறக்க வேண்டும் என்று அண்டாவில் வைத்து தண்ணிர் ஊற்றி கொலை செய்ய முயன்றார்கள் என்றும் ஜெயலட்சுமியின் கழுத்திலும் வயிற்றிலும் மிதித்து நீசெத்தால் தான் எனக்கு நிம்மதி என்ற கொடுமை படுத்தினார்கள் என்றும் அதற்கு பஞ்சாத்து பேசி ஒத்து வரவில்லை என்பதால் ஜெயலட்சுமி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் காவலர்கள் இருவரையும் சமாதானம் செய்து வைத்தார்கள் என்றும் ஆனாலும் எதிரிகள் யாரும் சமாதானமாகாமல் மீண்டும் 50 ஆயிரம் வாங்கி வந்தால் தான் 1 வது எதிரியுடன் குடும்பம் நடத்த முடியும் என்று கொடுமை படுத்தினார்கள் என்றும் இது குறித்து மீண்டும் மேலூர் அனைத்துமகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக தெரிந்து கொண்டென் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட:டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahila Court, Madurai.

| | |
|---|---|
| Special Sessions Case | - S.C **No. 200/2016** |
| Deposition of witness for | - P.W. 5 |
| Name | - Dharmaraj |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the **04.03.2021**

**முதல் விசாரணை:**

நான் பேப்பனையம் பட்டி யில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். அ.சா.1 ஐத் தெரியும். ஜெயலட்சுமிக்கம் 1 வது எதிரிக்கும் சுமார் 10 வருடம் முன்பு திருமணம் நடந்தது. சீர் செய்தார்கள். வரதட்சணைக்காக சண்டை நடந்தது. 1 வது எதிரி வரதட்சணை கேட்டு சண்டை போட்டார். அ.சா.1 க்கு அப்பா இல்லாததால் அடிக்கடி என்னை பஞ்சாயத்திற்கு கூட்டி சென்றார்கள். நாங்கள் சமாதானம் செய்து வைப்போம். 1 வது எதிரி ராணி என்பவருடன் சேர்ந்து இருந்ததால் தன்னுடன் வாழ்வதில்லை என ஜெயலட்சுமி அண்ணன் ஜெயபாலிடம் சொல்லி என்னை கூட்டிச் சென்றார்கள். 1 வது எதிரியும் ராணியும் சேர்ந்திருந்தார்கள் என்று தான் சொல்வார்கள் என்ன உறவு என்று எனக்கு தெரியாது அது சம்பந்தமாக சண்டை போடுவார்கள். அப்புறம் மெயின் ரோட்டில் உள்ள துவராகி கோவிலில் பஞ்சாயத்திற்கு மற்ற ஆட்களையும் என்னையும் கூட்டிவந்தார்கள். பஞ்சாயத்திற்கு போகும் முன்பாக ராணியின் பிறந்த ஊரிலிருந்து ஆட்களை கூட்டி

வந்துஅவர்களை கல்லை தூக்கி கொலை செய்ய வந்தார்கள். நான் கூட்டிக்கொண்டு ஓடி விட்டேன். மீண்டும்பஞ்சாயத்து செய்து இருவரையும் சேர்த்து வைத்தோம். மீண்டும் சண்டை என்ற நாங்கள் போன போது இரவு 7 மணிக்கு சந்திரகுமாரின் தம்பி அவர் வீட்டிற்கு ஜெயலட்சுமியின் பிள்ளையை அண்டாவிற்குள் போட்டு குப்புற கவிழ்த்து வைத்து விட்டார்கள். நான் போய் அண்டாவை தூக்கிய உடன் 1 வது எதிரியின் தம்பி தேவடியா வீட்டுப் பிள்ளை என்று கூறி குழந்தையை கொடுத்து விட்டார். ராணியுடன் சேர்ந்து வாழ்வதற்காக குழந்தையை கொன்று விட்டால் தாங்கள் சேர்ந்து வாழலாம் என்று செய்ததாக சொன்னார். ஜெயலட்சுமியின் பிள்ளையை தேடியதில் நான் தான் பிள்ளையை கொண்டு கொடுத்தேன். எதிரிகள் அவர்கள் வீட்டை அவர்களே உடைத்து விட:டு எங்கள் மீது கேஸ் கொடுத்தார்கள். கொட்டாம் பட்டி காவல் நிலையத்தில் கேஸ் கொடுத்தார்கள். நாங்கள் மகளிர் ஸ்டேசனில் சென்று கேஸ் கொடுத்தோம். அதன் பிறகு நான்வீட்டிற்கு வந்து விட்டேன். கேஸ்நடந்து கொண்டிருந்தது என்பது தெரியும்.இதற்கு மேல் ரொம்ப நாளாகிவிட்டதால் இதற்கு மேல் எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

ஏதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

என்னை ஜெயபால் கூட்டி வரவில்லை. அவர் வந்திருக்கிறாரா என்றால் வந்திருக்கிறார்.என்னை போலிசார் தான் கூட்டி வந்தார்கள். ஜெயபால் என்னை அய்யா என்று தான்சொல்லுவார். க்ள்ள வீட்டில் அய்யா என்று தான் சொல்வார்கள். அய்யா என்றால் அப்பாவைப் பெற்ற அப்பா முறை என்றால் சரிதான். கங்காணி எனக்கு மச்சினன் மாமன் முறை அக்காள் மகன் ஆவார். கங்காணி மகள் தான் ஜெயலட்சுமி மகன் தான் ஜெயபால் என்றால் சரிதான். பேப்பனையம்பட்டிக்கும் கள்ளம்பட்டி கச்சிராயம்பட்டிக்கும் சுமார் 10 மைல் தூரம் உள்ளது. ஜெயலட்சுமி, ஜெயபால்மற்றும் எதிரிகளுக்கு உள்ள பிரச்சனை பற்றி எனக்கு நேரடியாக தெரியும். மொத்தமாக எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு மாதம்ஒன்றிற்கு 3 முறை பஞ்சாயத்து பேசியுள்ளோம். இரு தரப்பினரும் கொட்டாம்பட்டியிலும் மேலூர் மகளிர் காவல் நிலையத்திலும் கேஸ் கொடுத்திருந்தார்கள். கொட்டாம்பட்டியில் சமாதானம் செய்து வைத்தார்கள். மேலூர் மகளிர்காவல்நிலையத்தில் சமாதானம் பேசி முடிக்கவில்லை. ஜெயா என்பவர்ஜெயலட்சுமியின் அக்காள். ஜெயா பெயரில் ஜெயலட்சுமியின் நகைகளையும் 1 வது எதிரியின் நகைகளையும் கனரா வங்கியில் அடகு வைத்த விபரம் என்கது தெரியாது. அந்தநகைகளை திருப்பினார்களா எதற்காக அடகு வைத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஜெயலட்சுமி பெயரில் சொத்து வாங்க வேண்டும் என்ற பிரச்சனை வந்தது என்றால் எனக்கு தெரியாது. தினசரி காய்கறி செலவிற்கு ரூபாய் கொடுப்பதில்லை என்பது சம்பந்தமான பிரச்சனை எனக்கு தெரியாது. காய்கறி

பஞ்சாயத்தை நான் தான் பேசி சமாதானம் செய்து வைத்தேன் என்று ஜெயபால் சொல்லியிருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது.ரொம்ப நாளாகிவிட்டது. என் பெயரில் கொலை வழக்கு உள்ளதா என்றால் அது பொய் கேஸ் என்று ஹை கோர்ட்டில் தள்ளுபடி ஆகிவிட்டது. நான்கொலை வழக்கில் எதிரி என்பதால் பஞ்சாயத்து செய்வது வழக்கம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு யார் போட்டுள்ளார்கள் என்றால் ஜெயலட்சுமி தான் தாக்கல் செய்துள்ளார். மகளிர் காவல் நிலையத்தில் தாக்கல் செய்துள்ளார். கள்ள ஜாதியில் மார்க்க கல்யாணம்செய்வது வழக்கமா என்றால் இல்லை. ஜெயலட்சுமி 2009 நவம்பரிலிருந்தே பேப்பனையம்பட்டியில்உள்ளார் என்றால் வழக்கிற்கு பிறகு தான் அங்கிருக்கிறாா். நகை பிரச்சனை சம்பந்தமாக மேலூா் காவல் நிலையத்தில் 1வது எதிரிக்கு சொந்தமான ஆறரை பவுண் நகைகளை ஜெயலட்சுமி கொடுக்க வேண்டும் என்றுஎழுதி வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த பஞ்சாயத்திலும் நான் பேசி எழுதிக்கொடுத்தேன் என்றும் அதன் படிஜெயலட்சுமி திரும்ப கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேலூா் மகளிர் காவல்நிலையத்தில் எழுதிக்கொடுத்த படி நானும் ஜெயலட்சுமியும் ஜெயபாலும் நடந்து கொள்ளாததால் தான் நீதிமன்றம் மூலம் தனிப் புகார்தாக்கல் செய்து இந்தவ ழக்கு வந்துள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்க பதிவு செய்வதற்கு முன்னாலேயே ஜெயபால், போலிசார் சகிதம் 1 வது எதிரியின் விட்டிற்கு சென்று அவரையும் அவா் தாயாரையும் அடித்து தூக்கி வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் ஜெயபாலை ஆஸ்பத்திரியில் தான் பார்த்தேன். கலகத்தில் நான் பார்க்கவில்லை. யார் யாரை அடித்தார்கள் என்ன பிரச்சனை என்ற விபரம் எனக்கு தெரியாது.. ஊரிலிருந்து கிளம்பும் போதே பிள்ளையை காணவில்லை என்று தெரிந்து சென்றேனா என்றால் அடிதடி பிரச்சனை என்று அழைத்து சென்றார்கள்.அங்கு வைத்து குழந்தையை காணவில்லை என தெரிந்து கொண்டேன். இந்த விபரங்களை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அடிதடிபிரச்சனை அண்டாவில் குழந்தை தவசியை பார்த்தது என்றைக்கு என்றால்எனக்கு தெரியாது, நான்இந்த வழக்கின் புகார்தாரருக்கு உறவினர் என்பதால் என் தாட்டியத்தின் பேரில் பல பஞ்சாயத்து செய்து வந்ததாலும் அதற்கு கட்டுப்படாததல் எதிரிகளுக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. நான் முதல் விசாரணையில்சொன்ன சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றும் ஜெயபால் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய் சாட்சியம்அளிக்கீறேன் என்றால் சரியல்ல.